**வாழ்த்துச் செய்தி** **த. ஜெயசீலன்**

என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய மிருதங்கக் கலாவித்தகர் திரு. கணேசசுந்தரம் கண்ணதாசன் அவர்களுடைய கவிதைத் தொகுதிக்கு வாழ்த்துரை வழங்வதில் பேருவகையடைகிறேன். தமிழ்க் கவிதைத் துறையிலும் சினிமாப் பாடற் துறையிலும் தனிச் சரிதமாக பெருஞ் சாதனை படைத்த கவியரசு கண்ணதாசனின் பெயரோடு எனது சொந்த மண்ணான நல்லூரை பிறப்பிடமாகக் கொண்ட உலகறிந்த மிருதங்கக் கலைஞரான 'ஈழநல்லூர் கண்ணதாசன்' அவர்களை நான் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அறிவேன். ஞாபகப் பறவை பின்னோக்கிப் பறக்கிறது.

எனது ஏழாவது வயதில், 1980 ம் ஆண்டில், நல்லை ஆதீனத்தில், அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தில், 'சங்கீத இரத்தினம்' 'இலய ஞான பூபதி' மா.சிதம்பரநாதன் அவர்களிடம் நானும் மிருதங்கம் பயிலச் சென்ற போது அங்கிருந்த என்னை விட சீனியர் மாணவர்களில் ஒருவராக கண்ணதாசனும் இருந்தார். அவரின் குடும்பமே ஒரு கலைக்குடும்பம். அவரின் தந்தையார் நல்லைக் குருமணியின் சீடர். சிறந்த கதாப்பிரசங்கியாக விளங்கியவர். அவரின் சகோதரிகள் சங்கீத விற்பன்னர்கள். சகோதரர்கள் இவரைப் போல மிருதங்கம் பயின்றுகொண்டிருந்தவர்கள். அக்காலத்திலேயே கண்ணதாசன் அவர்கள் சிறுகதைகளை எழுதியிருக்கிறார். சில கதைகள் பத்திரிகையில் வெளிவந்துமிருந்தன.

நல்லை ஆதீனத்தில் இருந்து அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் இடம்பெயர்ந்து நல்லூர் சாதனா பாடசாலையில் இயங்கிய போது எம்வயதை ஒத்த எண்ணற்ற பலர் அங்கே மிகமிக ஆர்வத்துடன் விடுமுறை நாட்களில் கலைகளை பயின்று கொண்டிருந்தோம். அன்றைய நல்லூர்ச் சூழல் பெரும் கலைச்சூழலாகத் திகழ்ந்தது. மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல், வாய்ப்பாட்டு போன்றன அங்கு பயிற்றுவிக்கப்பட்டன.

பரமசாமி மாஸ்ரர், பாலசிங்கம் மாஸ்ரர், சிதம்பரநாதன் மாஸ்ரர். மயில்வாகனம் மாஸ்ரர், நமசிவாயம் மாஸ்ரர், கிருபா அண்ணை, ஆனந்தராஜன் அண்ணை, சதா வேல்மாறன், அவரின் தம்பியான அமரர் மணிமாறன், கண்ணதாசன் அவர்கள் என பலரின் பெயர்கள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. 1985 ல் நான் மிருதங்கம் தரம் 4 பரீட்சையை யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரியில் தோற்றிய போது கண்ணதாசன் அவர்கள் மிருதங்கம் ஆசிரியர் தரப் பரீட்சையில் அங்கே தோற்றியது என் மனதில் நிழலாடுகிறது. எனது மிருதங்கப் பயிற்சி அவ்வாண்டோடு தடைப்பட்டது. ஆனால் கண்ணதாசன் அவர்கள் அதற்குப் பிறகு விஸவரூபம் எடுக்கத் தொட்ங்கியிருந்தார்.

மிருதங்கத் துறையில் இயல்பான ஆற்றலும் ஞானமும் பொலிய அக்கலையில் நிபுணத்துவம் மிக்கவராக மிளிரத் தொடங்கினார் அவர். தொண்ணூறுகளின் தொடக்கத்தில் நான் உயர்தரப் பரீட்சை எடுத்தபின் மீள 5ம் ஆண்டுக்கான மிருதங்கப் பயிற்சியை சில காலம் கண்ணதாசன் அவர்களிடமே பெற்றிருந்தேன். வர்ணத்திற்கு மூன்று காலத்திலும் வாசிக்கும் விதத்தை அழகாக சொல்லித்தந்தார். அவரின் கையெழுத்து அழகானது. மிருதங்கப் பாடங்களை குறியீட்டில் கார்வைகளை உள்வாங்கி பல தடவைகள் எனக்கு எழுதிப் பழக்கினார். அப்போது அவரின் வீட்டுக்கு எதிரே இருந்த பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் மண்டபத்திலும் அருகிலுள்ள மங்களபதி வைத்தியசாலைக் கட்டடத்திலும் மிருதங்க வகுப்புகளை அண்ணாமலை இசைத்தமிழ் மண்றம் பொலிவு குன்றிய நிலையில் நடத்திக் கொண்டிருந்தது. முன் இருந்த பலர் இல்லாமற் போயிருந்தார்கள். அக்காலத்தில் வகுப்பு முடிந்தபின் அவரின் வீடுசென்று காரைக்குடி மணியின் கச்சேரிகளை கேட்டது ஞாபகத்திற்கு வருகிறது. கண்ணதாசன் அவர்கள் காரைக்குடி மணி அவர்களில் மிகுந்த மதிப்பும் ஈடுபாடும் கொணடிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் கவிதைத் துறையில் எனக்கு ஏற்பட்ட ஈடுபாடு மிருதங்கத் துறையை மீண்டும் கைவிடச் செய்தது.

அன்று யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த மிருதங்க நிபுணராக கண்ணதாசன் திகழ்ந்தார். அப்போது நிகழ்ந்த அனேகமான கச்சேரிகள், கலை நிகழ்வுகள், அரங்கேற்றங்கள் அனைத்திலும் கண்ணதாசன் பங்கெடுத்தார். அவரின் சிஷ்யர் பரம்பரை ஒன்றும் தோன்றியிருந்தது. நல்லை ஆதீனம், இளங்கலைஞர் மன்றம், நல்லூர் உற்சவகால நிகழ்வுகள், கலைவிழாக்கள் என பலவற்றில கண்ணதாசன் அவர்களின் மிருதங்க வாசிப்பு ஆற்றலைக் கண்டு வியந்திருக்கிறேன்.

யுத்த நெருக்கடி அதிகரித்து வலிகாமம் இடம்பெயர்வைத் தொடர்ந்து தென்மராட்சியில் நாம் இடம்பெயர்ந்து இருக்கும் போது கண்ணதாசன் அவர்களின் அறைகூவல் கவிதை ஒன்று ‘ஈழநாதத்தில்’ வெளிவந்திருந்தது. அது எனக்கு மிகவும் ஆச்சர்யமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. அவர் தனது பயணத்தை அடுத்த பரிமாணத்திற்கு மாற்றி வன்னிக்குச் சென்றிருந்தார். அதன் பின் அவரின் கலைப்பணி பல மைல் கற்களைத் தொட்டன என அறிந்தேன். அக்காலத்தில் கண்ணதாசன் அவர்கள் கவிதைத் துறையிலும் கணிசமான அளவு ஈடுபட்டார். அவரின் பல கவிதைகளை நானும் சஞ்சிகைகளில் பார்திருக்கிறேன்.

ஒரு மென்மையான உண்மையான கலைஞனின் நெஞ்சில் கனல்கின்ற ஞானச் சீற்றத்தையும், சிறுமை கண்டு பொங்கும் சத்திய ஆவேசத்தையும், சமூகப் பிரச்சனைகள் கண்டு கொதிக்கும் கவிமனத்தையும், அவரின் கவிதைகளில் காண முடிந்தது. அவர் பிற்காலத்தில் செய்த கலைப் பணிகள் ஏராளம். அக்காலத்தில் நடந்த அனேகமான சகல கலை முயற்சிகளிலும் இவரின் முழுமையான பங்கு இருந்ததாக அறிந்தேன். அவரின் சகோதரர்கள் தமிழுலகம் நன்கறிந்த இசை வல்லுனர்களாக மாறினர்.

யுதத்தின் பின்பு அவர் குடும்பத்தோடு எனது அயற் கிராமத்தில் குடியிருந்த போது அவரைச் சந்தித்தேன். அவருக்கு மிகுந்த நெருக்கடிகள் ஏற்பட்ட போது மிகுந்த தனிமையான சூழலில் தனது இசையே தனக்கு துணையாக இருந்ததென்றும் தனது கலையே தன்னைக் காப்பாற்றியது என்றும் கூறினார். அவரின் கலை முயற்சிகள் மீண்டும் யாழில் சிறப்புறத் தொடங்கின. பல இசைநிகழ்ச்சிகள் நடந்தன். பல அரங்கேற்றங்களை அவரின் மாணவர்கள் செய்தனர். பல இடங்களில் இவர் மிருதங்க வகுப்புகளை நடாத்தினார். யாழ் பல்கலைக் கழக நுண்கலைத்துறை இவரை விருப்போடு அரவணைத்துக் கொண்டது. இக்காலத்தில் கண்ணதாசன் அவர்கள் எழுதிய பல கவிதைகள் எமது உள்ளூர் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த வண்ணம் இருந்தன. அவற்றில் சில தொகுக்கப்பட்டே இந் நூலாக வெளிவருவது மனநிறைவைத் தருகிறது.

இவரது அன்பு மாமனாரான சங்கீத ஆசிரியர் பாலசிங்கம் அவர்களை ஓரிரு தடவைகள் சந்தித்துள்ளேன். அவருக்கு யாழ் மாவட்டச் செயலகம் 'யாழ் முத்து' விருது வழங்கி கௌரவித்த யாழ் மாவட்ட பண்பாட்டு பெருவிழா நான் பிரதேச செயலராக கடமையாற்றிய பருத்தித்துறையில் நடைபெற்றபோது பெருமகிழ்வுடன் பாலசிங்கம் மாஸ்ரர் அவர்களை வாழ்த்தினேன். பின்பு பாலசிங்கம் மாஸ்ரர் அவர்களின் மரணச் சடங்கில் கண்ணதாசன் அவர்களை இறுதியாகச் சந்தித்துக் கதைத்தேன்.

**"இளமையில் வயிற்றுப் பசியில் துடித்த போது**

**சோறு கிடைக்கவில்லை**

**இடையில் சுதந்திரப் பசி ஆட்டிப் படைத்த போது**

**சுதந்திரம் கிடைக்கவில்லை**

**இப்போ வாசிப்பு பசி வதைக்கிறது**

**புத்தகங்கள் கிடைப்பதில்லை"**

என்பது இன்று வரையான கண்ணதாசன் அவர்களின் வாழ்வின் சாரம் அல்லது அவரின் வாழ்க்கையின் குறுக்கு வெட்டு வரிகள் என்பேன். இவ்வரிகளுள் பொதிந்துள்ள உண்மையின் பரிமாணங்களை நான் உணர்வேன்.

**"கொஞ்சமும் இரக்கமின்றி,**

**மனசெல்லாம்**

**என்னவர்களால் நிறைத்து வைத்திருக்கும்**

**என்னை,**

**காலம் காட்டிக் கொடுத்திருக்கிறது.**

**மறு பக்கமாய்,**

**காலம்**

**உலகையும் மனிதர்களையும்**

**எனக்குக் காட்டித் தந்திருக்கிறது.**

**இப்போது எனக்கு**

**அழுகை வருவதில்லை.**

**மனதை அழுத்தும்**

**கவலைகள் எழுவதில்லை.**

**ஒவ்வொன்றையும் தான்**

**எழுத்துக்கள் தின்று விடுகின்றன.**

**எழுத்து என்னைக் காதலிக்கிறது**

**எழுத்து என்னை அரவணைக்கிறது.**

**எழுத்து என்னை ஆற்றுப் படுத்துகிறது**

**எழுத்து என்னை எனக்குணர்த்துகிறது"**

என்று பாடும் கவிமனம் படைத்த எமது சமகாலத்தவரான மாபெரும் கலைஞர் கண்ணதாசன் அவர்கள் துன்பத் தடைகளிலிருந்து விரைவில் மீண்டு தன் கவிப் பயணத்தையும் தொடர எல்லாம் வல்ல நல்லைக் கந்தனை வேண்டி அவரின் கவிமுயற்சியை வாழ்த்திப் பணிகிறேன்.

22.02.2019